www.Padasalai.Net www.CBSEtips.in

SRIMAAN COACHING CENTRE-TRICHY-UG-TRB-TAMIL STUDY MATERIAL-TO CONTACT:8072230063.

2023-24 SRIMAAN

# SRIMAAN

# UG-TRB

# தமிழ்

அலகு-உ- சங்க இலக்கியம்

## UG-TRB MATERIALS

TAMIL/ ENGLISH / MATHS / CHEMISTRY/ PHYSICS
BOTANY/ ZOOLOGY/HISTORY /GEOGRAPHY AVAILABLE.

PG-TRB STUDY MATERIALS:–TAMIL/ENGLISH/ MATHEMATICS/PHYSICS
CHEMISTRY/COMMERCE (T/M & E/M)/BOTANY (T/M & E/M)/ ZOOLOGY
HISTORY (T/E)/ECONOMICS (T/E)/ GEOGRAPHY /BIO-CHEMISTRY
PGTRB-COMPUTER INSTRUCTOR GRADE-I -TO CONTACT -8072230063.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

SRIMAAN COACHING CENTRE-TRICHY-UG-TRB-TAMIL STUDY MATERIAL-TO CONTACT:8072230063.

2023-24
SRIMAAN

# TRB POLYTECHNIC LECTURER MATERIALS:

MATHEMATICS / ENGLISH /PHYSICS / CHEMISTRY/COMPUTER SCIENCE/ IT / EEE /ECE /EIE/ICE/MECHANICAL/CIVIL/MOP AVAILABLE.

UG-TRB: ALL SUBJECT STUDY MATERIALS AVAILABLE.

SCERT/DIET/GTTI STUDY MATERIAL AVAILABLE.

DEO & BEO (T/M & E/M) STUDY MATERIALS AVAILABLE.

TNPSC (CESSE)-(T/M & E/M) STUDY MATERIAL AVAILABLE.

PG-TRB COMPUTER INSTRUCTOR GRADE-1 –FULL STUDY MATERIAL WITH QUESTION BANK AVAILABLE

TNPSC-ASSISTANT DIRECTOR OF CO-OPERATIVE AUDIT
TNPSC-JSO STUDY MATERIAL AVAILABLE.

TNEB-(ASSESSOR/AE/JA) MATERIALS WITH QUESTION BANK AVAILABLE

TNTET /PG-TRB /TRB-POLYTECHNIC/ DEO & BEO MATERIALS ARE SENDING THROUGH COURIER.

TO CONTACT

8072230063

PG-TRB STUDY MATERIALS:–TAMIL/ENGLISH/ MATHEMATICS/PHYSICS CHEMISTRY/COMMERCE (T/M & E/M)/BOTANY (T/M & E/M)/ ZOOLOGY HISTORY (T/E)/ECONOMICS (T/E)/ GEOGRAPHY /BIO-CHEMISTRY PGTRB-COMPUTER INSTRUCTOR GRADE-I -TO CONTACT -8072230063.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# SRIMAAN COACHING CENTRE-TRICHY

## TO CONTACT:8072230063.

SRIMAAN

# UG-TRB

SRIMAAN

# தமிழ்

## அலகு-2-சங்க இலக்கியம்

www.Padasalai.Net SRIMAAN 8072230063

### சங்க இலக்கியம்
### முன்னுரை

உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றாக விளங்குகின்ற மொழி தமிழ் மொழியாகும். 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி' என்று புறப்பொருள் வெண்பா மாலை என்ற புற இலக்கண நூல் கூறுவதைக் கொண்டு தமிழின் பழமையை உணரலாம். தொடக்க காலத்தில் தமிழ் எந்தப் பகுதியில் பேசப்பட்டது என்பதைத் தொல்காப்பியம் என்ற பழம்பெரும் இலக்கணநூல் கூறுகிறது. தொல்காப்பியத்திற்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனார் என்பவர்

**வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்**
**தமிழ்கூறும் நல்லுலகம்**

என்று தமிழ்நாட்டின் எல்லையைக் கூறுகின்றார். எனவே, வடக்கே வேங்கடமலை முதல் தெற்கே குமரிமுனை வரை தமிழ் பேசப்பட்டதாக நாம் இதன் மூலம் அறிகிறோம். தமிழ்நாட்டைச் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களும், பல குறுநில மன்னர்களும் ஆண்டதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. சேர நாட்டிற்கு வஞ்சி மாநகரும், சோழ நாட்டிற்குப் பூம்புகாரும், பாண்டிய நாட்டிற்கு மதுரையும் தலைநகர்களாக இருந்துள்ளன. மூவேந்தர்களில் பாண்டிய மன்னர்கள் தமிழ்மொழியைப் போற்றி வளர்க்கும் வண்ணம் தமிழ்ச் சங்கங்கள் வைத்து நடத்தியதாகப் பல்வேறு சான்றுகள் கிடைக்கின்றன.

அச்சங்கங்களில் தமிழ்ப் புலவர்கள் இருந்து தமிழ் ஆய்வு செய்ததாகவும், தமிழில் பல்வேறு

செய்யுள்களை இயற்றியதாகவும் சங்க இலக்கியங்கள், இறையனார் களவியல் உரை போன்ற நூல்களால் அறியலாம். தமிழ் என்ற சொல் இனிமை என்ற பொருளை உடையது. இனிமையும், நீர்மையும் தமிழ் எனலாகும்' என்று பிங்கல நிகண்டு கூறுகின்றது. மதுரமான மொழி என வால்மீகி இராமாயணம் கூறுகின்றது. இந்த இனிமையான தமிழ் மொழியைச் சங்கம் மூலம் புலவர்களும் கற்றறிந்தோரும் சிற்றரசர்களும், பேரரசர்களும் பல்வேறு வகைப்பட்ட செய்யுட்களைப் பாடி வளர்த்தனர். புலவர்கள் அரசர்களால் பெரிதும் போற்றப்பட்டனர்.

## சங்க காலம் - விளக்கம்

பல்லாயிரம் ஆண்டுக் காலப் பழமையான இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட மொழியாகத் தமிழ் மொழி விளங்குகின்றது. அதனால் அம்மொழி நீண்டகால இலக்கிய வரலாற்றினைக் கொண்டிருக்கிறது. இதில் முதன்மையான இலக்கிய வரலாற்றுக் காலம் சங்க காலமாகும்.

## அகமும், புறமும்

- சங்க இலக்கியங்கள் அனைத்தும் அகம், புறம் எனும் இரு பெரும்பிரிவுகளுள் அடங்கும்.
- வாழ்க்கையின் உயிர் நாடியாகிய காதலும், போரும் சங்கப் பாடல்களில் சித்திரிக்கப்படுகின்றன.
- எட்டுத் தொகையுள் நற்றிணை, குறுத்தொகை, ஐங்குறுநூறு. கலித்தொகை, அகநானூறு எனும் ஐந்தும் அகத்திணை நூல்களாகும்.
- பத்துப் பாட்டுன் முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை தவிர ஏனைய ஏழும் புறப் பாடல்களாகும். இவற்றுள் ஆற்றுப்படை நூல்கள் ஐந்துள்ளன.
- பரிசில் பெற்ற கலைஞன் ஒருவன் பெறாதவர்க்கு அறிவுறுத்தி ஆற்றுப்படுத்துதல் ஆற்றுப்படையாகும். அது புறத்துறைகளுள் சிறந்ததாகப் போற்றப்படுகிறது. வேந்தர்கள் கலைஞர்களைப் போற்றிய திறம் ஆற்றுப் படைகளால் தெளிவாகப் புலப்படுகிறது.

## சங்க இலக்கியங்களில் அகத்திணை நூல்கள்

- சங்க இலக்கியம் என்று அறிஞர்களால் தொகுக்கப்பட்ட நூல்கள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகும். இவற்றுள் எட்டுத்தொகைத் தொகுப்பில் உள்ள அகநானூறு, ஐங்குறு நூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை ஆகிய ஐந்து நூல்களும் அகத்திணை நூல்கள்.
- பத்துப்பாட்டுத் தொகுக்கிலுள்ள குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு ஆகிய இரண்டு நூல்களும் அகத்தினை நூல்கள்.
- இத் தொகுப்பில் உள்ள நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய இரு நூல்களையும்கூட அகத்திணை நூல்கள் என்று அறிஞர்கள் சிலர் எடுத்துக்கொள்கின்றனர்.
- எந்த வகையில் அவை அகத்திணை நூல்களாகக் கொள்ளப்படுகின்றன என்பதை அந்தந்த நூல்கள் பற்றிய விளக்கங்களில் காணலாம்.

## சங்க இலக்கியங்கள்

- கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தினைச் சங்க காலம் என்பர். இக்காலத்தில் வாழ்ந்த புலவர்களே சங்கப் புலவர்கள். பத்துப்பாட்டுத் தொகுப்பில் அகத்திணை நூல்கள்

## குறிஞ்சிப்பாட்டு

- ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவிப்பதற்காகக் கபிலர் பெருமானால் பாடப்பெற்றது.261 அடிகளை உடையது.
- ஆசிரியப்பாவால் ஆனது.தலைவியின் பொருட்டு தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்பதாக அழகுற விளக்கப்பட்டுள்ளது.
- காந்நள் மலர் முதல் மலை எருக்கு ஈறாக 99 வகை மலர்கள் இதில் குறிக்கப்பட்டுள்ளன.

## முல்லைப்பாட்டு

- 103 அடிகள் கொண்ட இந்தப் பாடலைப் பாடியவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார். முல்லைத் திணையின் உரிப்பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமும்.
- தலைவன் வருகையை எதிர்நோக்கிக்கொண்டு தலைவி காத்திருத்தல் பற்றிக் கூறுவது முல்லைத்திணை.
- தலைவன் பாசறையில் இருக்கிறான். தலைவி காத்திருக்கிறாள். மழை பொழிந்த மாலைக் காலத்தில் பெருமுது பெண்டிர் நாழியில் நெல்லும், அதன்மேல் முல்லைப்பூக் குவியலும் வைத்து, அலரிப் பூக்களைத் தூவி விரிச்சிக்காக (சகுனத்திற்காகக் காத்திருக்கின்றனர்.
- தாய்ப்பசுவின் வரவுக்காகக் காத்திருக்கும் கன்றைப் பார்த்து ஒருத்தி 'இன்னே வருகுவர் தாயர்' என்று சொல்லிக் கன்றைத் தடவிக் கொடுக்கிறாள். இச் சொல்லை விரிச்சியாக எடுத்துக்காட்டிப் பாசறையிலுள்ள தலைவன் விரைவில் வருவான் என்று பெருமுது பெண்டிர் தலைவியைத் தேற்றுவதாக இந்தப் பாடல் அமைந்துள்ளது.

## எட்டுத்தொகை நூல்களில் அகத்திணைத் தொகுப்பு நூல்கள்

- சங்க இலக்கியம் எனப்படுவது தமிழில் கிறிஸ்துக்கு முற்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்கள் ஆகும்.
- சங்க இலக்கியம் தற்போது கண்டுபிடிக்கப்பட்டது வரை 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளது.
- சங்க இலக்கியங்கள் அக்காலகட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் தினசரி வாழ்க்கை நிலைமைகளைப் படம்பிடித்துக் காட்டுவதாய் உள்ளன.
- பண்டைத்தமிழரது காதல், போர், வீரம், ஆட்சியமைப்பு, வணிகம் போன்ற நடப்புகளைச் சங்க இலக்கியப்பாடல்கள் அறியத்தருகின்றன.
- சங்க இலக்கியங்கள் பதினெண் மேற்கணக்கு நூல்கள் ,பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனப் பெரும்பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

## சங்க இலக்கிய நூல்கள்

- ✓ எட்டுத் தொகை நூல்களையும் பத்துப் பாட்டுகளையும் கொண்டது சங்க இலக்கியம்.
- ✓ பழைய உரையாசிரியர்கள் இந்த இலக்கியத்தைச் 'சான்றோர் செய்யுள்' என்று குறிப்பிட்டார்கள்.
- ✓ இது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. இதில் உள்ள பாடல்கள் அகம் (உள்) புறம் (வெளி) என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டது.
- ✓ சங்க இலக்கியம் இயற்கை இலக்கியமும் ஆகும். பல வகை விலங்குகள், பறவைகள், பூச்சிகள்,

www.Padasalai.Net

மரங்கள், செடிகள், கொடிகள், மலர்கள் யாவும் அதில் உள்ளன.

## எட்டுத்தொகை

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம் புறம் என்று இத்திறத்த எட்டுத் தொகை".

- **நற்றிணை:** இது ஒரு அக நூல். பல புலவர்களால் எழுதப்பட்டது. இதில் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன. இவற்றில் 1 பாடல் முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை (234). ஒரு பாடலின் சில பகுதிகள் கிடைக்கவில்லை (285). பாடல்கள் 8 – 13 வரிகள் கொண்டவை.
- **குறுந்தொகை:** இது ஒரு அக நூல். பல புலவர்களால் எழுதப்பட்டது. இதில் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன. பாடல்கள் 4 – 8 வரிகள் கொண்டவை.
- **ஐங்குறுநூறு:** இது ஒரு அக நூல். ஐந்து புலவர்களால் எழுதப்பட்டது. இதில் மொத்தம் 500 பாடல்கள் உள்ளன. குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை ஆகிய ஒவ்வொரு திணையிலும் நூறு பாடல்கள் கொண்டது.
- ஓரம்போகியார் மருதத் திணைப் பாடல்களையும், அம்மூவனார் நெய்தற் திணைப் பாடல்களையும், கபிலர் குறிஞ்சித் திணைப் பாடல்களையும், ஓதலாந்தையார் பாலைத் திணைப் பாடல்களையும், பேயனார் முல்லைத் திணைப் பாடல்களையும் பாடியுள்ளனர். இந்த நூலில் 2 பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை (129,130) . பாடல்கள் 3 – 6 வரிகள் கொண்டவை .
- **பதிற்றுப்பத்து:** இது ஒரு புற நூல். சேர மன்னர்களுக்காக எழுதப்பட்ட நூல். பத்து மன்னர்களுக்காக, ஆளுக்கு 10 பாடல்கள் எழுதப்பட்டன. ஆனால் 80 பாடல்கள் தான் நமக்குக் கிடைத்துள்ளன. பாடல்கள் 8-56 வரிகள் கொண்டவை.
- **பரிபாடல்:** இது அகமும் புறமும் கொண்ட நூல். பல புலவர்களால் எழுதப்பட்டது. பாடல்கள் முருகனுக்கும், திருமாலுக்கும், வைகை நதிக்கும் எழுதப்பட்டன. மொத்தம் 70 பாடல்கள் எழுதப்பட்டன. நமக்குக் கிடைத்தது 22 பாடல்கள். பாடல்கள் 32 – 140 வரிகள் கொண்டவை.
- **கலித்தொகை:** இது ஒரு அக நூல். ஐந்து புலவர்களால் எழுதப்பட்டது. இதில் மொத்தம் 150 பாடல்கள் உள்ளன. பாடல்கள் 11 – 80 வரிகள் கொண்டவை. ஆயர் குடியினரின் ஏறு தழுவுதல் பற்றிய விவரங்கள் இந்த நூலில் மட்டுமே உள்ளன.
- **அகநானூறு:** இது ஒரு அக நூல். பல புலவர்களால் எழுதப்பட்டது. இதில் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன. பாடல்கள் 13 – 31 வரிகள் கொண்டவை. மொத்தம் 200 பாடல்கள் பாலைத் திணையிலும், 80 பாடல்கள் குறிஞ்சித் திணையிலும், 40 பாடல்கள் முல்லைத் திணையிலும், 40 பாடல்கள் நெய்தற் திணையிலும், 40 பாடல்கள் மருதத் திணையிலும் உள்ளன.
- **புறநானூறு:** இது ஒரு புற நூல். பல புலவர்களால் எழுதப்பட்டது. இதில் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன. பாடல்கள் 4 – 40 வரிகள் கொண்டவை. மூவேந்தர், குறு நிலமன்னர், பாணர், புலவர், விறலியர், கொடை, மறம், வீரர்கள், நாடு, மலை, போர், வீரத்தாய்மார்கள், இறந்த மன்னர்களின் புகழைப் பாடுதல், வாழ்க்கையின் நிலையாமை, மன்னர்க்குப் பெண் தர மறுத்தல் என்று பல செய்திகள் இதில் உள்ளன. மேலும், பரணர், ஔவையார், கோவூர் கிழார், மாங்குடி கிழார் போன்ற பெரும் புலவர்கள் தங்களை பாணர்களாக பாவித்து பாடும் 32 பாடல்கள் உள்ளன.

## பத்துப்பாட்டு

- "முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய கோலநெடு நல் வாடை கோல் குறிஞ்சி பட்டினப் பாலை கடாத்தொடும் பத்து."
- இவற்றில் ஐந்து ஆற்றுப்படை நூல்கள். ஆற்றுப்படுத்தல் என்றால் 'வழி காட்டுதல்' என்று பொருள். திருமுருகாற்றுப்படை முருகனை அடையும் வழியைக் காட்டும் நூல்.
- மற்ற நான்கு ஆற்றுப்படை நூல்களும் மன்னன் ஒருவனிடம் பரிசு பெற்ற பாணன் இன்னொரு பாணனுக்கு மன்னனிடம் சென்று பரிசு பெறும் முறையை விவரமாகக் கூறுவது. மன்னர்கள் தமிழை வளர்த்த பாணர்களின் மேல் கொண்ட அன்பையும் மதிப்பையும் நாம் ஆற்றுப்படை நூல்களில் காணலாம்.

## திருமுருகாற்றுப்படை (புலவராற்றுப்படை):

- இது ஒரு ஆற்றுப்படை நூல். 317 அடிகளைக் கொண்டது.
- புலவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் முருகனைப்பற்றி எழுதியது.
- முருகனுடைய அறுபடை வீடுகளைப் பற்றிய செய்திகள் இதில் உள்ளன. அவை திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), திருவேரகம் (சுவாமிமலை), குன்றுதோறாடல் (திருத்தணி), பழமுதிர்சோலை ஆகியவை.
- முருகனுடைய 6 முகங்களின் இயல்பு, 12 கைகளின் தொழில் ஆகியவற்றைப் பற்றியும் விவரங்கள் உள்ளன.

## பொருநராற்றுப்படை:

- இது ஒரு ஆற்றுப்படை நூல். 248 அடிகளைக் கொண்டது.
- புலவர் முடத்தாமக் கண்ணியார் சோழன் கரிகால் பெருவளத்தானுக்காக எழுதியது. இதில் பாலை யாழ் மிகச் செம்மையாக வருணிக்கப்பட்டுள்ளது.
- ஒரு பாடகியின் பேரழகைப் புலவர் அழகாக விவரிக்கின்றார்.
- சோழ மன்னன் கரிகாலன் தன்னை நாடி வந்த பாணனுக்கு நான்கு வெள்ளைக் குதிரைகள் கொண்ட தேரைக் கொடுத்து, ஏழு அடி பின் நடந்து, பாணனைத் தேரில் ஏறக் கூறிச் சிறப்பிப்பதாகக் குறிப்பு உள்ளது.
- சோழ நாட்டின் வளமும் காவிரியின் வளமும் விவரிக்கப்பட்டுள்ளன.

## சிறுபாணாற்றுப்படை:

- இது ஒரு ஆற்றுப்படை நூல். 269 அடிகளைக் கொண்டது.
- புலவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் குறுநில மன்னன் ஓய்மான் நாட்டு நல்லியக்கோடனுக்காக எழுதியது.
- இந்தப் பாட்டில் சேர நாட்டின் வளம், சோழ நாட்டின் வளம், பாண்டிய நாட்டின் பெருமை, கடையெழு வள்ளல்களின் சிறப்பு யாவும் கூறப்பட்டுள்ளன.
- மன்னனை நோக்கிச் செல்லும் வழியில், அவனுடைய நாட்டில் வெவ்வேறு நிலங்களில் வாழ்பவர்கள் பாணர்க்குச் செய்யும் உபசரிப்பைப் பற்றியும் அறிகின்றோம்.

## பெரும்பாணாற்றுப்படை:

- இது ஒரு ஆற்றுப்படை நூல். 500 அடிகளைக் கொண்டது.
- புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் குறுநில மன்னன் தொண்டைமான் இளந்திரையனுக்காக எழுதியது.
- இந்தப் பாட்டில், பாதையில் மாட்டு வண்டியில் செல்லும் உப்பு வணிகர், கழுதையின் மேல் பண்டங்களைக் கொண்டு செல்லும் பிற வணிகர், காட்டு மக்களின் வாழ்க்கையும் விருந்தோம்பலும்,



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

குறிஞ்சி நிலத்தில் வாழ்வோர் வாழ்க்கை முறை, இடையர் குடியிருப்பு, முல்லை நிலத்தினர் பயணிகளுக்குக் அளிக்கும் உணவு, மருத நிலத்தின் காட்சிகளும் விருந்தோம்பலும், சர்க்கரை ஆலை, மீனவர் குடியிருப்பும் விருந்தோம்பலும், அந்தணர் குடியிருப்பும் விருந்தோம்பலும், கலங்கரை விளக்கம், காஞ்சீபுரத்தின் சிறப்பு, இளந்திரையனின் சிறப்பு, அவனுடைய விருந்தோம்பல் ஆகியவற்றை நாம் காணலாம்.

## முல்லைப்பாட்டு:

- இது 103 அடிகளைக் கொண்டது.
- புலவர் நப்பூதனார் பாண்டிய மன்னன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியனுக்காக எழுதியது.
- இந்தப் பாட்டில் மன்னனின் பாசறை, அவன் பணியில் உள்ள யவனர், பாசறையில் பணி புரியும் பெண்கள், தண்ணீர் மணி காட்டி, தன் வீரர்களை நினைத்து வருந்தும் மன்னன், மன்னனை நினைத்து ஏங்கும் அவன் மனைவி, ஏழு மாடத்து அரண்மனை, முல்லை நிலத்தின் அழகான வருணனை யாவற்றையும் காணலாம்.

## மதுரைக்காஞ்சி:

- இது 782 அடிகளைக் கொண்டது.
- புலவர் மாங்குடி மருதனார் பாண்டிய மன்னன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்காக எழுதியது.
- மதுரை நகரில் உள்ள கடைகள், நிகழ்வுகள் யாவற்றையும் மிகச் சிறப்பாக நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகின்றார் மாங்குடி மருதனார்.
- இந்த நூலில் நெடுஞ்செழியனின் நால்வகைப் படையின் வலிமை, அவனது வீரமும் சிறப்பும், பாணர்களுக்கு யானைகளையும் பொன்னால் செய்த தாமரை மலர்களை மன்னன் கொடுப்பது, பாண்டிய நாட்டின் மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் ஆகிய நிலங்களின் சிறப்பு, மதுரை நகரின் கோட்டையும், அகழியும், நாள் அங்காடி, இரவு அங்காடி, பௌத்தப் பள்ளி, சமணப் பள்ளி, அந்தணர் பள்ளி, நீதி மன்றம், இரவின் மூன்று சாமங்களில் நடக்கும் நிகழ்ச்சிகள், மதுரையின் ஒலிகள், தொழில் மாக்கள், மதுரையின் சிறப்பு யாவற்றையும் நாம் காணலாம்.

## நெடுநல்வாடை:

- இது 188 அடிகளைக் கொண்டது.
- புலவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் எழுதியது. மன்னனின் பெயர் கிடைக்கவில்லை. ஆனால் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்காக எழுதப்பட்டது என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர்.
- இந்தப் பாட்டில் நீண்ட குளிர் காலத்தினால் துன்பத்தில் தவிக்கும் இடையர்கள், பறவைகள், குரங்குகள், மற்றும் மாடுகள், மழைக் காலத்தின் செழிப்பு, மாலை நேரத்தில் விளக்கு ஏற்றி வழிபடும் பெண்கள், அரண்மனையைக் கட்டும் வல்லுநர், அரண்மனையின் அமைப்பு, அந்தப்புரத்தின் அமைப்பு, அரசியின் அழகிய வேலைப்பாடு அமைந்த கட்டில், அரசி கணவனை நினைத்து வருந்தும் நிலைமை, பாசறையில் மன்னனின் நிலைமை யாவற்றையும் காணலாம்.

## குறிஞ்சிப்பாட்டு:

- இது 261 அடிகளைக் கொண்டது.

www.Padasalai.Net SRIMAAN 8072230063

- புலவர் கபிலர் ஆரிய மன்னன் பிரகதத்தனுக்குத் தமிழரின் களவு முறைத் திருமணத்தை இந்தப் பாடல் மூலம் விவரிக்கின்றார்.
- தோழி தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே ஏற்பட்ட அன்பைப் பற்றி தலைவியின் தாயிடமும் செவிலித் தாயிடமும் கூறி, திருமணம் வேண்டுவதை 'அறத்தோடு நிற்றல்' என்று தமிழ்ச் சான்றோர் கூறினர்.
- இந்தப் பாட்டில் தோழி ஒருத்தி தலைவியின் தாயிடம், தலைவி தலைவனைத் தினைப் புனத்தில் எப்படிச் சந்தித்தாள், காட்டு யானையிடமிருந்து தலைவன் அவர்களை எப்படிக் காப்பாற்றினான், தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே எவ்வாறு அன்பு ஏற்பட்டது, தலைவன் எவ்வாறு திருமணத்தை நாடுகின்றான், தலைவன் கொடூரமான பாதையில் இரவில் தனியே வருவதால் அவனுக்குத் துன்பம் நேரிடும் என்று தலைவி வருந்துகின்றாள், என்றெல்லாம் விவரமாகக் கூறுகின்றாள்.
- கண்கள் சிவக்க அருவியில் குளித்து விட்டு 99 மலர்களால் தலைவியும் தோழியும் தங்களை அலங்கரித்துக் கொள்ளும் காட்சி சிறப்புடையது.

### பட்டினப்பாலை:

- இது 301 அடிகளைக் கொண்டது.
- புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் சோழன் கரிகால் பெருவளத்தானுக்காக எழுதியது. காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிய விவரங்கள் நிறைந்த நூல் இது.
- இந்தப்பாட்டில் சோழ நாட்டின் வளமை, காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு, முனிவர்கள் வாழும் தவப் பள்ளிகள், மறவர்களின் விளையாட்டுக் களம், பரதவர் இருப்பிடம், காவிரிப்பூம்பட்டினத்தின் இரவு நிகழ்ச்சிகள், வரி வசூலிப்பவர்கள், ஏற்றுமதி, இறக்குமதி, மாளிகைகள், பல்வேறு கொடிகள், உழவர், அந்தணர், வணிகர் ஆகியோர் பற்றிய விவரங்கள், ஊரின் செல்வம், கரிகாலனின் போர்த் திறமை, யாவற்றையும் நாம் காணலாம்.

### மலைப்படுகடாம் (கூத்தராற்றுப்படை):

- இது ஒரு ஆற்றுப்படை நூல். 583 அடிகளைக் கொண்டது.
- புலவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் குறுநில மன்னன் நன்னன் வேண்மானுக்காக எழுதியது.
- இந்தப்பாட்டில் பாணர் குடும்பம் பல்வேறு இசைக் கருவிகளை சுருக்குப் பைகளில் கட்டிக் கொண்டு செல்வது, நன்னனின் சிறப்பு, நவிர மலையின் தன்மை, பாதையில் உள்ள நல்லதும் பொல்லாததும், கானவர் குடியும் விருந்தோம்பலும், நன்னனின் மலை நாட்டுச் செல்வம், இரவில் பயணம் கூடாது என்ற அறிவுரை, கவணிடமிருந்து தப்புதல், வழுக்கி விழாமல் பாதையில் செல்லுதல், இறைவனைத் தொழுது செல்லுதல், இரவில் குகையில் தங்குதல், மலைப் பாம்பிடமிருந்து தப்பித்தல், மலை மக்களின் விருந்தோம்பல், மலையின் ஒலிகள், வழியில் காணும் கோட்டைகளும் நடு கற்களும், உதவும் மறவோர், சிற்றூரின் விருந்தோம்பல், உழவர்களின் உதவி, நன்னனின் அரண்மனை, நன்னனின் கொடைத் தன்மை யாவற்றையும் நாம் காணலாம்.

## பதினெண் மேற்கணக்கு நூல்கள்

- பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையில் நிலவிய கடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்ட

www.Padasalai.Net

நூல்கள் **பதினெண் மேற்கணக்கு** நூல்கள்.

- பதினெண்மேற்கணக்கு நூல்களின் இலக்கணம் கூறும் நூல் பன்னிரு பாட்டியல்.
- பதினெண் மேற்கணக்கு நூல்கள் இருவகைப்படும்.அவை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் ஆகும்.

## எட்டுத்தொகை நூல்கள்

- எட்டுத்தொகை என்பது எட்டு நூல்களின் தொகுப்பு.இது சங்க இலக்கியம். இதில் அடங்கிய ஒவ்வொரு நூலும் பலரால் பல காலகட்டங்களில் எழுதப்பட்டுப் பின்னர் ஒருசேரத் தொகுக்கப்பட்டது.
- தொழில், அளவு, பாட்டு, பொருள் ஆகியவற்றால் தொகுக்கப்பட்டமையால் தொகை எனப் பெயர் பெற்றது.
- எட்டுத்தொகை நூல்களை "எண்பெருந்தொகை" எனவும் வழங்குவர்.
- இத்தொகையுள் ஏறத்தாழ 2352 பாடல்களை 700 புலவர்கள் பாடியுள்ளனர்.
- இவர்களில் 25 அரசர்களும், 30 பெண்பாற்புலவர்களும் உண்டு.ஆசிரியர் பெயர் தெரியாப் பாடல்கள் 102.
- கலிப்பா வகையால் ஆன நூல் கலித்தொகை.
- பரிபாட்டு வகையால் ஆன நூல் பரிபாடல்.
- மற்ற ஆறு நூல்களும் ஆசிரியப்பாவால் ஆனது.
- எட்டுத்தொகை நூல்களுள் காலத்தால் முந்தியது புறநானூறு.
- எட்டுத்தொகை நூல்களுள் காலத்தால் பிந்தியது பரிபாடல்,கலித்தொகை.
- எட்டுத்தொகை நூல்களுள் முதன் முதலாக தொகுக்கப்பட்ட நூல் குறுந்தொகை.
- எட்டுத்தொகை நூல்கள் வகை:
- அகம்,புறம் மற்றும் இரண்டும் சார்ந்தவை என்று மூன்று வகையாக உள்ளது.

### அக நூல்கள்:

- நற்றிணை
- குறுந்தொகை
- அகநானூறு
- ஐங்குறுநூறு
- கலித்தொகை
- புற நூல்கள்
- புறநானூறு
- பதிற்றுப்பத்து

**அகமும் புறமும் உடைய நூல்கள்:**

- பரிபாடல்

**எட்டுத்தொகை நூல்களைப் பற்றிய வெண்பா :**

- நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
  ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
  கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
  இத்திறத்த எட்டுத் தொகை

www.Padasalai.Net SRIMAAN 8072230063

SRIMAAN COACHING CENTRE-TRICHY-UG-TRB-TAMIL STUDY MATERIAL (NEW SYLLABUS)-TO CONTACT:8072230063.

2023-24 SRIMAAN

| நூல்கள் | தொகுத்தவர் | தொகுபித்தவர் | பாடல் அடி சிறுமை | பெருமை | தெய்வம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| நற்றிணை | தெரியவில்லை | பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி | 9 | 12 | திருமால் | இந்நூல் 175 புலவர்களால் பாடப்பட்டதுஇந்த நூலுக்கு திருமால் வணக்கப் பாடல் பாரதம் பாடிய பெருந்தேவனார் இயற்றியது. |
| குறுந்தொகை | பூரிக்கோ | தெரியவில்லை | 4 | 8 | முருகன் | இந்நூல் 205 புலவர்களால் பாடப்பட்டது. இந்நூலின் முதல் 380 பாடல்களுக்கு பேராசிரியரும், 20 பாடல்களுக்கு நச்சினார்கினியரும் உரை எழுதியுள்ளார்கள். |
| ஐங்குறுநூறு | புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் | யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை | 3 | 6 | சிவன் | ஐந்து திணைகளையும் பற்றித் திணை ஒன்றுக்கு 100 பாடல்களாக 500 பாடல்களைக் கொண்டது இந் நூல். |
| பதிற்றுபத்து | தெரியவில்லை | தெரியவில்லை | 8 | 57 | | பத்துச் சேர மன்னர்கள் பற்றிப் பத்துப் புலவர்கள் தலைக்குப் பத்துச் செய்யுள் வீதம் பாடிய 100 செய்யுட்களின் தொகுப்பு இது. இதன் முதற்பத்தும், இறுதிப்பத்தும் அழிவுற்றன.இப்போது 80 செய்யுள்கள் மட்டுமே உள்ளன |
| பரிபாடல் | தெரியவில்லை | தெரியவில்லை | 25 | 400 | | பரிபாடல் என்னும் இசைப்பாக்களால் தொகுக்கப்பட்டதால் பரிபாடல் எனப் பெயர் பெற்றது. 70 பாடல்களில் 22 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. இதற்கு பரிமேலழகர் உரை எழுதியுள்ளார்.திருமால் மீது 8 பாடல், செவ்வேள் மீது 31, காடுகாள்(கொற்றவை) மீது 1, வையை மீது 26, மதுரை மீது 4 - என்று 70 பாடல்கள் இருந்தன. |

www.Padasalai.Net SRIMAAN 8072230063

STUDY MATERIALS:TET/PGTRB/BEO&DEO/UG-TRB TRB-POLYTECHNIC/COM.INSTRUCTOR/SCERT/ DIET TNPSC/TNEB/TNUSRB/TO CONTACT:8072230063.



SRIMAAN

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| நூல்கள் | தொகுத்தவர் | தொகுபித்தவர் | பாடல் | அடி | தெய்வம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| கலித்தொகை | நல்லந்துவனார் | தெரியவில்லை | 11 | 80 | சிவன் | 150 கலிப்பாக்களை கொண்டது.ஒவ்வொரு திணையைப் பற்றியும் ஒரு புலவராக ஐந்து புலவர்களால் பாடப்பட்டது. பாலை-பெருங்கடுங்கோ, குறிஞ்சி - கபிலர், மருதம் - மதுரை மருதனிளநாகனார், முல்லை - சோழன் நலுருத்திரன், நெய்தல் - நல்லத்துவனார்.. உரை எழுதியவர் நச்சினார்க்கினியர்.கலிப்பா வகையால் பாடப்பெற்ற ஒரே தொகை நூல் இதுவே. |
| அகநானூறு | உருத்திர சன்மனார் | பாண்டியன் உக்கிரப்பெருவழுதி | 13 | 31 | சிவன் | நூலிற்கு முதலில் உரை எழுதியவர் நா.மு.வேங்கடசாமி நாட்டார்.1-120 = களிற்றியானை நிரை 121-300 = மனிமிடைப்பவளம் 301-400 = நித்திலக்கோவை நூலை முதலில் பதிப்பித்தவர் = வே. இராசகோபால் ஐயர் சங்க இலக்கியங்களுள் வரலாற்று செய்திகளை அதிகமாக கூறும் நூல் அகநானூறு. |
| புறநானூறு | தெரியவில்லை | தெரியவில்லை | 4 | 40 | சிவன் | புறநானூற்றில் 11 திணைகளும், 65 துறைகளும் கூறப்பட்டுள்ளன. புறநானூற்றில் கூறப்படாத திணை = உழிஞைத் திணை பெண்களின் வீரத்தைக் கூறும் துறை மூதின் முல்லைபுறநானூறில் 10 வகை ஆடைகள், 28 வகை அணிகலன்கள், 30 வகை படைக்கருவிகள், 67 வகை உணவுகள் கூறப்பட்டுள்ளன. |

SRIMAAN 8072230063 www.Padasalai.Net

## எட்டுத்தொகை நூல்களின் சிறப்பு பெயர்கள்:

| வ.எண் | எட்டுத்தொகை நூல்கள் | வேறு பெயர்கள் |
|---|---|---|
| 1 | நற்றிணை | 1.நற்றிணை நானூறு<br>2.தூதின் வழிகாட்டி |
| 2 | குறுந்தொகை | 1.நல்ல குறுந்தொகை<br>2.குறுந்தொகை நானூறு |
| 3 | ஐங்குறுநூறு | |
| 4 | பதிற்றுப்பத்து | இரும்புக் கடலை |
| 5 | பரிபாடல் | 1.பரிபாட்டு<br>2.ஓங்கு பரிபாடல்<br>3.இசைப்பாட்டு<br>4.பொருட்கலவை நூல்<br>5.தமிழின் முதல் இசைபாடல் நூல் |
| 6 | கலித்தொகை | 1.கலி<br>2.குறுங்கலி<br>3.கற்றறிந்தோர் ஏத்தும் கலி<br>4.கல்விவலார் கண்ட கலி<br>5.அகப்பாடல் இலக்கியம் |
| 7 | அகநானூறு | 1.அகம்<br>2.அகப்பாட்டு |

www.Padasalai.Net SRIMAAN 8072230063

| வ.எண் | எட்டுத்தொகை நூல்கள் | வேறு பெயர்கள் |
|---|---|---|
| | | 3.நெடுந்தொகை |
| | | 4.நெடுந்தொகை நானூறு |
| | | 5.நெடும்பாட்டு |
| | | 6.பெருந்தொகை நானூறு |
| 8 | புறநானூறு | 1.புறம் |
| | | 2.புறப்பாட்டு |
| | | 3.புறம்பு நானூறு |
| | | 4.தமிழர் வரலாற்று பெட்டகம் |
| | | 5.தமிழர் களஞ்சியம் |
| | | 6.திருக்குறளின் முன்னோடி |

## முச்சங்கங்கள்

- ❖ பாண்டிய மன்னர்கள் தொடக்கத்தில் கடல் கொண்ட தென்மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். அங்கு, தமிழ் அறிஞர் பெருமக்களைக் கொண்டு தமிழ் இலக்கிய ஆய்வும், செய்யுள் இயற்றுதலும் நடைபெற்றன. அதுவே முதற் சங்கம் எனப்பட்டது.
- ❖ தென்மதுரை கடல் பெருக்கெடுத்து வந்ததால் அழிந்தது. அதன் பிறகு கபாடபுரம் என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு பாண்டியர்கள் ஆண்டார்கள். அங்கும் ஒரு தமிழ்ச் சங்கம் தொடங்கப்பட்டுப் புலவர்களும், அரசர்களும் தமிழ் ஆய்ந்தனர்.
- ❖ இது இடைச் சங்கம் என்று அழைக்கப் பட்டது.
- ❖ கபாடபுரமும் கடலால் அழிவுற்ற பிறகு இன்றைய மதுரைக்குப் பாண்டியர் தலைநகரை மாற்றினர். இங்கும் ஒரு தமிழ்ச் சங்கம் தொடங்கப் பெற்று கி.பி.200 வரை நடைபெற்றது.
- ❖ இது கடைச்சங்கம் என்று அழைக்கப்பட்டது. இவ்வாறு மூன்று சங்கங்கள் நடத்தப் பெற்று, புலவர்களும், அரசர்களும் பல்வேறு செய்யுட்களைப் பாடி, தமிழை வளர்த்தனர். இம் முச்சங்கங்களின் காலமே சங்க காலம் என்று இன்றுவரை அழைக்கப்படுகிறது. இனி ஒவ்வொரு சங்கம் பற்றியும் விவரமாகக் காணலாம்.

### சங்கம் என்ற பெயர்

- ✶ சங்கம் என்ற பெயரை முதலில் ஆராய்வோம். சங்க இலக்கியங்கள் என்று சொல்லப்படுகின்ற எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்களில் சங்கம் என்ற சொல்லே பயன்படுத்தப்படவில்லை. கி.பி.400 வாக்கில் வச்சிரநந்தி என்பவர் நான்காம் சங்கம் தொடங்கினார்.

www.Padasalai.Net SRIMAAN 8072230063



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- பிறகு சமணத் துறவிகள் சங்கம் என்ற சொல்லைப் பயன்படுத்திச் சமயத் தொண்டு ஆற்றினர். அந்தச் சொல்லைத் தான் பிற்கால இலக்கிய ஆசிரியர்கள் கி.பி.200க்கு முன் தோன்றிய இலக்கியங்களைச் சங்க இலக்கியங்கள் என்று அழைத்தனர்.
- பாண்டிய மன்னர்கள் புலவர்களைக் கூட்டி வைத்துத் தமிழாய்ந்து, செய்யுட்கள் இயற்றிய அவையைச் சங்கம் என்று கூறினர். மதுரையில் சங்கம் போன்ற அமைப்பு ஒன்று இருந்ததைத் தமிழ் இலக்கியங்கள் பல்வேறு பெயர்களில் சுட்டுகின்றன.
- பத்துப்பாட்டில் ஒன்றான சிறுபாணாற்றுப்படை,தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை(அடிகள் 66-67) என்று கூறுகிறது. இதை வைத்துப் பார்க்கும் போது மதுரையில் தமிழ் நிலை பெற்றிருந்தது என்பது புலனாகிறது. மதுரைக் காஞ்சி எனும் இலக்கியம் தொல்லாணை நல்லாசிரியர் புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
- நிலந்தரு திருவின் நெடியோன்(அடிகள் 761-763) என்று கூறுவதைக் காணும்போது நிலந்தரு திருவின் நெடியோன் என்ற பாண்டியன் அவையில் புலவர்கள் ஒருங்கிணைந்து செய்யுள் இயற்றினர் எனப் புலனாகிறது.
- புறநானூற்றில் 72ஆம் பாடல்,ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன் தலைவனாக உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின் புலவர் பாடாது வரைகஎன் நிலவரை என்று கூறுகிறது.
- இதில் சங்கத்துத் தலைவராக மாங்குடி மருதன் என்னும் புலவர் இருந்ததும், புலவர்கள் செய்யுள் பாடியதும் கூறப்பட்டுள்ளது. காப்பிய இலக்கியமாகிய சிலப்பதிகாரம் "தென்தமிழ் நன்நாட்டுத் தீதுதீர் மதுரை" என்றும், மணிமேகலை "தென் தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்" என்றும் கூறுகிறது.
- கி.பி. 600 வாக்கில் வாழ்ந்த திருநாவுக்கரசர் சிவபெருமானைச் சங்கத்தோடு இணைத்து போற்றிப் பாடுகிறார். தருமி என்னும் ஏழைப் புலவனுக்குக் கொங்குதேர் வாழ்க்கை' என்ற குறுந்தொகைப் பாடலை எழுதிக் கொடுத்தார் என்பதை, நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக்கிழி தருமிக்கு அருளினோன்காண் (6.76.3) என்று கூறுகின்றார்.

- ***சங்க இலக்கியம்*** (Sangam literature) எனப்படுவது தமிழில் பொ.ஊ.மு. 500-இல் இருந்து பொ.ஊ. 200 வரை உள்ள காலப்பகுதியில் எழுதப்பட்ட **செவ்வியல் இலக்கியங்கள்** ஆகும்.
- சங்க இலக்கியம் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட வரை 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளது.
- இப்புலவர்களுள் பலதரப்பட்ட தொழில் நிலையில் உள்ளோரும் பெண்களும், நாடாளும் மன்னரும் உண்டு.
- சங்க இலக்கியங்கள் அக்காலகட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் தினசரி வாழ்க்கை நிலைமைகளைப் படம்பிடித்துக் காட்டுவதாய் உள்ளன. பண்டைத்தமிழரது காதல், போர், வீரம், ஆட்சியமைப்பு, வணிகம் போன்ற நடப்புகளைச் சங்க இலக்கியப் பாடல்கள் வழி அறிய முடிகிறது.
- 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான சி. வை. தாமோதரம்பிள்ளை, உ. வே. சாமிநாத ஐயர் ஆகியோரின் முயற்சியினால் சங்க இலக்கியங்கள் அச்சுருப் பெற்றன.
- ***எட்டுத்தொகையும்,பத்துப்பாட்டும் தான் சங்க இலக்கிய*** நூல்கள்.இவை ***பதினெண் மேற்கணக்கு*** நூல்கள் எனவும்; சங்கமருவிய நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் பெரும்பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

## எட்டுத்தொகை நூல்கள்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

SRIMAAN COACHING CENTRE-TRICHY-UG-TRB-TAMIL STUDY MATERIAL (NEW SYLLABUS)-TO CONTACT:8072230063.

2023-24 SRIMAAN

| நூல் | காலம் | இயற்றியவர் |
|---|---|---|
| நற்றிணை | | |
| குறுந்தொகை | | |
| ஐங்குறுநூறு | | கபிலர் |
| பதிற்றுப்பத்து | | |
| பரிபாடல் | | |
| கலித்தொகை | | நல்லந்துவனார் முதலிய பலர் |
| அகநானூறு | | பலர் |
| புறநானூறு | | பலர் |

## பத்துப்பாட்டு நூல்கள்

| | | |
|---|---|---|
| திருமுருகாற்றுப்படை | எட்டாம் நூ.ஆ. | <u>நக்கீரர்</u> |
| பொருநராற்றுப்படை | | முடத்தாமக்கண்ணியார் |
| சிறுபாணாற்றுப்படை | 4 - 6ஆம் நூ.ஆ. | நற்றாத்தனார் |
| பெரும்பாணாற்றுப்படை | | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| நெடுநல்வாடை | 2 - 4ஆம் நூ.ஆ. | நக்கீரர் |
| குறிஞ்சிப் பாட்டு | | <u>கபிலர்</u> |
| முல்லைப்பாட்டு | | நப்பூதனார் |
| மதுரைக் காஞ்சி | இரண்டாவது,நான்காவது நூ.ஆ. | மாங்குடி மருதனார் |
| பட்டினப் பாலை | மூன்றாம் நூ.ஆ. | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| மலைபடுகடாம் | இரண்டாவது,நான்காவது நூ.ஆ. | பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் |

## பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

| | | |
|---|---|---|
| திருக்குறள் | பொ.ஊ.மு. முதல் நூ.ஆ. முதல் பொ.ஊ. ஐந்தாம் நூ.ஆ. | திருவள்ளுவர் |
| நான்மணிக்கடிகை | ஆறாம் நூ.ஆ. | விளம்பி நாகனார் |
| இன்னா நாற்பது | 5ஆம் நூ.ஆ. | கபிலதேவர் |
| இனியவை நாற்பது | ஐந்தாம் நூ.ஆ. | பூதஞ்சேந்தனார் |
| களவழி நாற்பது | ஐந்தாம் நூ.ஆ. | பொய்கையார் |
| திரிகடுகம் | நான்கவது நூ.ஆ. | நல்லாதனார் |
| ஆசாரக்கோவை | 7ஆம் நூ.ஆ. | பெருவாயின் முள்ளியார் |
| பழமொழி நானூறு | 6ஆம் நூ.ஆ. | மூன்றுரை அரையனார் |
| சிறுபஞ்சமூலம் | 6ஆம் நூ.ஆ. | காரியாசான் |

www.Padasalai.Net SRIMAAN 8072230063

STUDY MATERIALS:TET/PGTRB/BEO&DEO/UG-TRB TRB-POLYTECHNIC/COM.INSTRUCTOR/SCERT/ DIET TNPSC/TNEB/TNUSRB/TO CONTACT:8072230063.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| முதுமொழிக்காஞ்சி | 4ஆம் நூ.ஆ. | கூடலூர் கிழார் |
| ஏலாதி | 6ஆம் நூ.ஆ. | கணிமேதாவியார் |
| கார் நாற்பது | 6ஆம் நூ.ஆ. | கண்ணன் கூத்தனார் |
| ஐந்திணை ஐம்பது | 6ஆம் நூ.ஆ. | மாறன் பொறையனார் |
| திணைமொழி ஐம்பது | 6ஆம் நூ.ஆ. | கண்ணன் சேந்தனார் |
| ஐந்திணை எழுபது | 6ஆம் நூ.ஆ. | மூவாதியார் |
| திணைமாலை நூற்றைம்பது | 6ஆம் நூ.ஆ. | கணிமேதாவியார் |
| கைந்நிலை | 6ஆம் நூ.ஆ. | புல்லங்காடனார் |
| நாலடியார் | 7ஆம் நூ.ஆ. | சமணமுனிவர்கள் பலர் |

## அகம் - புறம் பாகுபாடு

- பண்டைத் தமிழ் மக்கள், வாழ்க்கையை அகம் என்றும், புறம் என்றும் பகுத்தனர். உள்ளம் ஒத்த தலைவனும் தலைவியும் தாம் உற்ற இன்பத்தைப் பிறருக்கு எடுத்துக்காட்ட முடியாது.
- இத்தகு காட்டலாகாப் பொருளான காதல் பற்றிய பாடல்களை அகம் என்பர்.
- பிறருக்குப் புலப்படுத்தப்படும் கொடை, வீரம், கருணை முதலிய உணர்வுகள் பற்றிய பாடல்களைப் புறம் என்பர்.

## அக நூல்கள்

- பத்துப்பாட்டு நூல்களுள் முல்லைப் பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை ஆகியன அகநூல்கள்.
- எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியன அகநூல்கள்.

## ஐந்திணை விளக்கம்

- திணை என்பதன் பொருள் ஒழுக்கம். அகத்திணைகள் ஏழு.
  அவை **முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை** என்பன. நிலப் பாகுபாட்டையும், தலைவன்-தலைவி ஆகியோர் அக வாழ்வின் பல்வேறு நிகழ்வுகளையும் ஒட்டித் திணைப் பாகுபாடு அமைந்துள்ளது.
- ஒவ்வொரு திணைக்கும் **முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்** என்னும் பாகுபாடு உண்டு. எந்தச் சூழலில் யார் பேசுவதாகப் (கூற்று) பாடல் பாடப்படுகிறது என்பதை விளக்கும் **துறை** என்ற பிரிவு திணைக்கு உண்டு.
- திருநாவுக்கரசருக்குப் பின் வந்த பல்வேறு இலக்கிய ஆசிரியர்களும் சங்கம் என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர். சின்னமனூர்ச் செப்பேடு, சங்கத்தில் இலக்கியம் இயற்றும் பணியோடு, மொழிபெயர்ப்புப் பணியும் நடைபெற்றதாக ஒரு செய்தியைக் கூறுகிறது.

***மாபாரதம் தமிழ்ப்படுத்தும்***
***மதுராபுரிச் சங்கம் வைத்தும்***

என்று கூறுவதால் மகாபாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்த பணியும் சங்கத்தில் நடந்ததை நாம் அறிகிறோம்.

- வடமொழி இலக்கியமாகிய வால்மீகி இராமாயணம் சங்கம் இருந்தமைக்குச் சான்றாக விளங்குகின்றது. அந்த இலக்கியத்தில் சீதையைத் தேடச் சென்ற வானரரை நோக்கிச் சுக்கிரீவன் "பொதிகை மலையில்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அகத்திய முனிவரின் தமிழ்ச் சங்கம் உள்ளது; அதனைக் காண்பீர்" என்று கூறியதாக வருகிறது. பிளினி, தாலமி போன்ற மேலைநாட்டு அறிஞர்களும் சங்கம் பற்றி உரைக்கின்றனர். இலங்கை வரலாற்று நூல்களான மகாவம்சம், இராஜாவளி, இராஜரத்னாகிரி போன்ற நூல்களும் சங்கம் இருந்தமைக்குச் சான்று பகர்கின்றன.

## முதற் சங்கம்

- கடல் கொண்ட தென்மதுரையில் பாண்டிய மன்னர்களால் நிறுவப் பெற்ற சங்கம் தான் முதற்சங்கமாகும். இச்சங்கத்தை நிறுவிய மன்னன் காய்சின வழுதி என்பவனாவான். காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் என்ற பாண்டிய மன்னன் ஈறாக 89 அரசர்கள் 4440 ஆண்டுகள் இச்சங்கத்தை நடத்தியதாக இறையனார்களவியல் உரை கூறுகிறது.
- இச்சங்கத்தில் அகத்தியர், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், குன்றெறிந்த முருகவேள், முரஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவன் போன்ற புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்தனர். 4449 புலவர்கள் தமிழ் ஆராய்ந்து செய்யுள் பாடினர். அவர்களால் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை போன்ற நூல்கள் பாடப்பட்டன.

## இடைச்சங்கம்

- தென்மதுரையைக் கடல் கொண்ட பிறகு கபாடபுரத்தில் தொடங்கப் பெற்ற இடைச்சங்கம் 3700 ஆண்டுக் காலம் நடைபெற்றது. வெண்தேர்ச் செழியன் என்ற பாண்டிய மன்னனால் தொடங்கப் பெற்ற இச்சங்கம் முடத்திருமாறன் முடிய 59 மன்னர்களால் நடத்தப் பெற்றது.
- இச்சங்கத்தில் அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர் கருங்கோழியார் வெள்ளூர்க் காப்பியனார் போன்ற 3700 புலவர்கள் பாடினர். இவர்களால் பாடப்பெற்றவை கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலை அகவல் போன்ற நூல்களாகும்.

## கடைச் சங்கம்

- கபாடபுரமும் கடலால் அழிந்த பிறகு தற்போது உள்ள மதுரையில் கடைச் சங்கம் எனப்படுகின்ற மூன்றாம் சங்கம் தொடங்கப் பெற்றது. இரண்டாம் சங்கத்தை நடத்தி, கபாடபுரம் அழியும் போது அங்கிருந்து பிழைத்து வந்த முடத்திருமாறனால் இது, தொடங்கப் பெற்றது.
- இச்சங்கம் முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாக 49 அரசர்களால் நடத்தப் பெற்றது. 1850 ஆண்டுகள் இச்சங்கம் நடைபெற்றது. இச்சங்கத்தில் சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார், மருதன் இளநாகனார், நக்கீரனார் என 449 புலவர்கள் பாடினர்.
- இதில் எழுதப்பட்ட நூல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, பரிபாடல் போன்றவை ஆகும். முச்சங்கங்கள் பற்றிய மேற்கண்ட செய்திகளை இறையனார் களவியல் உரை என்ற கி.பி. 8ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்தான் கூறுகின்றது.
- இந்நூல் கூறும் செய்திகள் முழுமையான நம்பிக்கைக்குரியனவா என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். இருப்பினும் சங்கம் என்ற ஓர் அமைப்பு, பாண்டியர்களால் நடத்தப் பெற்றமை குறித்துச் சங்க இலக்கியங்களிலும், பிற்கால இலக்கியங்களிலும் நிறையச் சான்றுகள் கிடைக்கின்றன.
- முச்சங்கங்களும் இருந்த கால அளவு, பாடிய புலவர்களின் எண்ணிக்கை, சங்கம் நடத்திய அரசர்கள் பற்றி இறையனார் களவியல் உரை கூறும் செய்திகள் முழுமையும் உண்மையாக இருக்க வாய்ப்பு இல்லை.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



கி.மு. 500 முதல் கி.பி.200 முடிய உள்ள காலமே சங்கம் நடைபெற்ற காலமாக இருக்க முடியும்.

## சங்க இலக்கியங்கள்

- சங்கம் என்ற ஓர் அமைப்பு இருந்ததாகப் பல்வேறு ஆதாரங்கள் கிடைத்தாலும், சங்கத்திலே அமர்ந்து புலவர்கள் பாடிய பாடல்கள் சிலவாகத் தான் இருக்க முடியும். பெரும்பாலான பாடல்கள், பல்வேறு இடங்களில், பல்வேறு காலங்களில், பல்வேறு புலவர்களால் பாடப்பட்டவையாகத்தான் இருக்க வேண்டும்.
- அவை கி.மு.500 முதல் கி.பி.200 முடிய உள்ள காலத்தில் பாடப்பட்டவையாக இருக்கலாம். சங்கப் பாடல்கள் எட்டுத்தொகை நூல்கள் என்றும், பத்துப்பாட்டு என்றும் பிரிக்கப்பட்டிருத்தல் காணத்தக்கது. ஏராளமான பாடல்கள் ஓலைச் சுவடிகளில் இருந்து அழிந்துபோக, எஞ்சியவற்றைத் தொகுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அக்காலத்து அரசர்கள் புலவர்களின் துணையோடு செயல்பட்டனர்.
- அவ்வாறு தொகுக்கப்பட்டவையே எட்டுத்தொகையும், பத்துப்பாட்டுமாகும். இக்காலப்பகுதியில் படைக்கப்பட்ட இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் மட்டுமே கிடைத்துள்ளது. எட்டுத் தொகுதிகளாகத் தொகுக்கப்பட்ட எட்டு நூல்கள் எட்டுத்தொகை என்றும், பத்துப் பெரிய பாடல்கள் பத்துப் பாட்டு என்றும் பெயர் பெற்றன.

## தொல்காப்பியம்

- சங்க இலக்கியங்களை நாம் அறிந்து கொள்வதற்கு முன்னால் சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த தொல்காப்பியம் பற்றி அறிந்து கொள்வது தேவையான ஒன்றாகும்.
- சங்க இலக்கியங்களை அகம், புறம் எனப் பிரித்துப் பார்ப்பதற்கும், தமிழ் மொழியின் முழுமையான இலக்கணத்தை அறிந்து கொள்வதற்கும் தொல்காப்பியம் துணை நிற்கிறது.
- சங்க இலக்கியங்களுக்கு முன்னால் பல நூறு ஆண்டுக்காலத் தமிழிலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும். கடல் பெருக்கெடுத்து ஊர்களை அழித்ததாலும், ஓலைச் சுவடிகள் பல்வேறு காரணங்களால் அழிந்ததாலும் அவ்விலக்கியங்கள் இன்றைக்குக் கிடைக்கவில்லை.
- அவ்விலக்கியங்களுக்கு அகத்தியர் எழுதிய அகத்தியம் என்ற இலக்கண நூல் இருந்ததாகவும், அதனைத் தொடர்ந்து அகத்தியரின் மாணவரான தொல்காப்பியர் தொல்காப்பியத்தை எழுதியதாகவும் தமிழ் ஆய்வாளர்கள் இறையனார் களவியல் உரையை அடிப்படையாகக் கொண்டு கூறுகின்றனர்.
- தொல்காப்பியர் கி.மு. 500 அளவில் வாழ்ந்ததாக, பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியமே சங்க இலக்கியத்தின் இலக்கணமாகத் திகழ்ந்தது.
- தொல்காப்பியம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட இலக்கண நூலாகும். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பன அவை. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

## எழுத்ததிகாரம்

- நூல் மரபு
- மொழி மரபு
- பிறப்பியல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

- புணரியல்
- தொகை மரபு
- உருபியல்
- உயிர் மயங்கியல்
- புள்ளி மயங்கியல்
- குற்றியலுகரப் புணரியல்

என ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டு எழுத்தின் பிறப்பு, தொகை, வகை, பெயர் மயக்கம், சொற்களின் புணர்ச்சி ஆகியவற்றை விளக்குகின்றது. இதில் 483 நூற்பாக்கள் உண்டு.

TO BE CONTINUED…..

## STUDY MATERIALS AVAILABLE

- **UG-TRB:-(ALL SUBJECT) STUDY MATERIALS AVAILABLE.**
- **TET:-(PAPER-1 & 2 )-(TAMIL & ENGLISH MEDIUM) FULL STUDY MATERIALS AVAILABLE.**
- **PG-TRB: (ALL SUBJECT) STUDY MATERIALS WITH QUESTION BANK AVAILABLE.**
- **TRB-BEO:-(TAMIL & ENGLISH MEDIUM) STUDY MATERIAL WITH Q.BANK AVAILABLE.**
- **TNPSC-DEO (TAMIL & ENGLISH MEDIUM) STUDY MATERIAL WITH QUESTION BANK AVAILABLE.**

**SCERT/ DIET/ GTTI (LECTURER)-NEW SYLLABUS (2023-2024)-(ALL SUBJECT) FULL STUDY MATERIAL AVAILABLE.**

**SRIMAAN COACHING CENTRE-TRICHY.**

**TO CONTACT:8072230063.**

www.Padasalai.Net www.CBSEtips.in

SRIMAAN COACHING CENTRE-TRICHY- TET/PG-TRB / BEO/ DEO/TRB-POLYTECHNIC/COM.INS/TNEB/UG-TRB/SCERT/JSO STUDY MATERIALS AVAILABLE- CONTACT:8072230063.

2023-24 SRIMAAN

# TRB-POLYTECHNIC LECTURER-(NEW SYLLABUS) STUDY MATERIALS AVAILABLE

- MATHEMATICS STUDY MATERIAL with Question Bank.
- ENGLISH STUDY MATERIAL with Question Bank.
- PHYSICS STUDY MATERIAL with Question Bank.
- CHEMISTRY STUDY MATERIAL with Question Bank.
- MODERN OFFICE PRACTICE STUDY MATERIAL with Q.B.
- COMPUTER SCIENCE STUDY MATERIAL with Question Bank.
- INFORMATION TECHNOLOGY STUDY MATERIAL with Q.Bank.
- ECE STUDY MATERIAL with Question Bank.
- EEE STUDY MATERIAL With Question Bank.
- MECHANICAL STUDY MATERIAL With Question Bank.
- CIVIL STUDY MATERIAL With Question Bank.
- EIE STUDY MATERIAL with Question Bank.
- ICE STUDY MATERIAL with Question Bank.

# UG-TRB MATERIALS

- UG TRB: TAMIL MATERIAL WITH QUESTION BANK.
- UG TRB: ENGLISH STUDY MATERIAL +Q. BANK (T/M)

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

SRIMAAN COACHING CENTRE-TRICHY- TET/PG-TRB / BEO/ DEO/TRB-POLYTECHNIC/COM.INS/TNEB/UG-TRB/SCERT/JSO STUDY MATERIALS AVAILABLE- CONTACT:8072230063.

2023-24
SRIMAAN

- UG-TRB: MATHEMATICS MATERIAL WITH Q. BANK (E/M)
- UG TRB: PHYSICS MATERIAL WITH QUESTION BANK (E/M)
- UG TRB: CHEMISTRY MATERIAL + QUESTION BANK (E/M)
- UG TRB: HISTORY MATERIAL + Q.BANK (T/M & E/M)
- UG TRB: ZOOLOGY MATERIAL + QUESTION BANK (E/M)
- UG TRB: BOTANY MATERIAL +QUESTION BANK (T/M& E/M)
- UG TRB: GEOGRAPHY STUDY MATERIAL (E/M)

SCERT/DIET/GTTI (LECTURER) STUDY MATERIAL AVAILABLE.

# PG-TRB MATERIALS

- PG TRB: ENGLISH MATERIAL WITH QUESTION BANK.
- PG TRB: TAMIL STUDY MATERIAL +QUESTION BANK (T/M)
- PG-TRB: MATHEMATICS MATERIAL WITH Q.BANK (E/M)
- PG TRB: PHYSICS MATERIAL WITH QUESTION BANK (E/M)
- PG TRB: CHEMISTRY MATERIAL + QUESTION BANK (E/M)
- PG TRB: COMMERCE MATERIAL WITH Q.BANK (T/M)&(E/M)
- PG TRB:ECONOMICS MATERIAL+Q. BANK (T/M & E/M)

www.Padasalai.Net

SRIMAAN COACHING CENTRE-TRICHY- TET/PG-TRB / BEO/ DEO/TRB-POLYTECHNIC/COM.INS/TNEB/UG-TRB/SCERT/JSO STUDY MATERIALS AVAILABLE- CONTACT:8072230063.

2023-24 SRIMAAN

- PG TRB: HISTORY MATERIAL + Q. BANK (T/M & E/M)
- PG TRB: ZOOLOGY MATERIAL + QUESTION BANK (E/M)
- PG TRB: BOTANY MATERIAL +QUESTION BANK (T/M& E/M)
- PG TRB: GEOGRAPHY STUDY MATERIAL (E/M)

TNPSC-JSO STUDY MATERIAL AVAILABLE.

PG-TRB: COMPUTER INSTRUCTOR-GRADE-I (NEW SYLLABUS)-2023-2024 STUDY MATERIAL AVAILABLE

TNPSC-GROUP-I C

TNPSC-DEO (District Educational Officer(Group – I C Services)
(TAMIL & ENGLISH MEDIUM) STUDY MATERIAL AVAILABLE.

TRB-BEO (Block Educational Officer)
(TAMIL & ENGLISH MEDIUM) STUDY MATERIAL AVAILABLE.

10% Discount for all materials. Materials are sending through COURIER.

TO CONTACT

8072230063

SRIMAAN